Document

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 73/2021</u>

**2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ம் நாள் வெள்ளிக்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அர்ச்சுணன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : கிருஷ்ணன் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : பேரளி | சமயம் | : – |
| சாதி | : – | வயது | :58/2022 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எனது அப்பா சர்வே எண். 111 ஏக்கர் 15.28 செண்டில் ஏக்கர் 5.09 செண்டினை கிரயம் வாங்கியது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா வாங்கிய 5.09 செண்ட் நிலமானது மொத்த ஏக்கர் 15.28–ல் எந்த பகுதியில் உள்ளது என்பது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யு.டி.ஆர்–க்கு பிறகு எனது அப்பா வாங்கிய 5.09 செண்டில் 0.57 செண்ட் குறைவாக 4.52 செண்ட் மட்டுமே இருந்ததால் மேற்படி 0.57 செண்ட் தொடர்பாக நான் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
2) எனது அப்பா வாங்கிய நிலங்களில் நாங்கள் தான் பயிர் செய்து வருகிறோம். எனது அப்பா வாங்கிய நிலத்தில் 0.57 செண்ட் நிலம் குறைவது தற்போது தான் தெரிய வந்ததாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உட்பிரிவு ஏற்பட்டு 20 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவு செய்யும் போது தான் 0.57 செண்ட் நிலம் குறைந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா வாங்கிய சர்வே எண்.111 என்பது 111/1A என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
3) வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டா பாஸ்புத்தகம் எனக்கு எப்போது வழங்கப்பட்டது என்றால் எனது அப்பா இருக்கும் போதே கொடுத்துவிட்டார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 15 வருடங்களுக்கு முன்பாகவே இந்த பட்டா புஸ்தகத்தை வழங்கிவிட்டார்கள். எனது அப்பா கிரயம் வாங்கி சர்வே எண். 111 என்பது

பட்டா பாஸ்புத்தகத்தில் 111/1A 1 ஹெக்டேர் 83.50 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) உட்பிரிவு எங்களுக்கு தெரியாமல் ஏற்பட்டது என நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா இருக்கும் போதே மேற்படி உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்பதை தெரிந்துக் கொண்டு தற்போது தெரியாது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையுடன் தாக்கல் செய்யயப்பட்டுள்ள வரைபடம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா கிரயம் பெற்ற சொத்து இவ்வழக்கின் பிரதிவாதிகள் சொத்திற்கு மேல்புறமாக உள்ளது என்றால் சரிதான்.

5) எனது சொத்திற்கும் மேல்புறம் தென்வடலாக வண்டிபாதை உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண். 111 –க்குண்டான வரைபடத்திலும் சொத்திற்கும் மேல்புறம் தென்வடலாக வண்டிபாதை இல்லை. எனது சொத்திற்கும், பிரதிவாதிகளின் வாங்கிய சொத்திற்கும் தென்புறம் கீழ்மேலாக பாதை ஏதுவும் இல்லை. எனது அப்பா கிரயம் பெற்ற சர்வே எண். 111–க்கும் மேற்குபுறத்தில் ராமசாமி உடையார், செங்கான் செட்டியார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. அதற்கு மேல்புறம் தான் ரோடு உள்ளது. அது எறையூர் ரோடு ஆகும்.

6) எனது நிலத்திற்கும் கீழ்புறம் இந்திரா என்பவரின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அவர் அதை கிரயம் பெற்றுள்ளார். எறையூர் ரோட்டில் இருந்து தென்புறத்தில் அதாவது என்னுடைய இடத்திற்கும் தென்புறத்தில் உள்காட்டிற்கு செல்வதற்கும், மருவத்தூர் செல்வதற்கு பாதை உள்ளது என்றால் உள்ளது. இந்திராவின் நிலத்திற்கு கீழ்புறம் (கிழக்கு பக்கம்) தம்பஞ்செட்டி மற்றும் துரைகண்ணு ஆகியோரது நிலம் உள்ளது என்றால் சரிதான். மருவத்தூர் செல்வதற்கான பாதை தம்பஞ்செட்டி இடம் வரை தான் உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின் விவசாய நிலமாக உள்ளது என்றால் சரிதான்.

7) நான் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள சொத்து விபரத்தில் யு.டி.ஆர்படி சர்வே எண். 7 பிரிவுகளாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதில் 0.57 செண்ட் எந்தெந்த உட்பிரிவுகளில் எந்தெந்த அளவுகளில் வருகிறது என்பதை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 0.57 செண்ட் நிலம் மேற்படி 7 பிரிவுகளில் எந்தெந்த பிரிவுகளில் எவ்வளவு அளவு வருகிறது என்பதை காட்டுவதற்காக நான் நீதிமன்றத்தில் ஆணையரை நியமனம் சொல்லி கேட்கவில்லை என்றால் சரிதான்.

Dwnloaded

8) சர்வே எண். 111/2B என்ற இடத்தை எனது அப்பா சுப்புராய உடையார் என்பவரிடம் கிரயம் வாங்கினார். அதன் விஸ்தீர்ணம் சுமார் 0.80 செண்ட் இருக்கும். 0.80 செண்ட் நிலம் சர்வே எண்.111 உள்ள சொத்திற்கும் வடகிழக்கு மூலையில் உள்ளது, சர்வே எண். 111/1A –க்கான பட்டாவில் (ஏக்கர் 5.80 செண்ட்) எனது அப்பா வாங்கியதாக சொல்லப்படும் அளவைவிட கூடுதலாகவே இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சர்வே எண்.111/1A இடத்தை வாங்கிய சுப்புராய உடையாருக்கு எத்தனை வாரிசுகள் என்பதை நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சுப்புராய உடையாரின் வாரிசுகளுக்குள் பாகம் பிரிந்துவிட்டதா இல்லையா என்ற விபரத்தையும் நான் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9) மாதிரி வரைபடத்தில் A,B,G,C,H,F,E பகுதியானது ஒருநாளும் என் தகப்பனார் கிரயம் பெற்ற சொத்தில் கட்டுப்பட்ட சொத்தல்ல என்றும், எனது தகப்பனாரிடமோ அல்லது எங்களிடமோ அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 111/1B 0.40 செண்ட், 111/1D 0.62 செண்ட், 111/1F 0.58 செண்ட், 111/1I ஏக்கர் 1.19 செண்ட், 111/1K 0.43 செண்ட் ஆக மொத்தம் ஏக்கர் 3.22 செண்ட் நிலத்தை விஸ்வநாத உடையாரின் மகன் ராமலிங்கம் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

10) இந்த சொத்துக்கள் தான் எனது அப்பா கிரயம் பெற்ற சொத்திற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். ராமலிங்கத்திற்கு ரவிசந்திரன் என்ற ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். ராமலிங்கமும், ரவிசந்திரனும் சேர்ந்து 111/1F 0.38 செண்ட், 111/1I ஏக்கர் 1.19 செண்ட், 111/1K 0.43 செண்ட் 11/10/1995 ஆம் தேதி சந்திரமதி என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ராமலிங்கம் இறந்ததற்கு பின்னர் அவரது மனைவி விஜயலட்சுமி, அவரது மகன் ராமசந்திரன் மற்றும் சந்திரமதி ஆகியோர் சேர்ந்து 20/06/2007 ஆம் தேதி சீனிவாசன் என்பவருக்கு ஒரு பவர் பத்திரம் 111/1B 0.40 செண்ட், 111/1D 0.62 செண்ட், 111/1F 0.48 செண்ட், 111/1I ஏக்கர் 1.19 செண்ட், 111/1K 0.43 செண்ட் மற்றும் 111/1M (விஸ்தீர்ணம் குறிப்பிடாமல்) எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11) 111/1G 0.84 செண்ட், 111/1H 0.35 செண்ட், 111/1J 0.99 செண்ட், 111/1I ஏக்கர் 0.36 செண்ட், 111/1C 0.62 செண்ட். 111/1E 0.62 செண்ட் ஆகியவை மணி, வெங்கடாசலம், ஜெயா ஆகியோர்களுக்கு சொந்தமான

Downloaded

சொத்து என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் விஸ்வநாத உடையார் மகனின் சொத்திற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். மணி, வெங்கடாசலம், ஜெயா அவர்களுடைய மகன் விஸ்வநாதன் என்பவர்கள் சேர்ந்து 30/05/2007 ஆம் தேதி வசந்தா என்பவருக்கு ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் பற்றி எனக்கு தெரியாது. 11/10/2005, 30/05/2007 111/1B முதல் 111/1L வரையான 11 அயிட்டங்களும் இந்த பவர் பத்திரத்திற்கு கட்டுப்பட்ட சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

12) ரமேஷ், செந்தில்குமார், கார்த்தி ஆகியோர்கள் மேற்படி 11 அயிட்ட சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர்கள் கிரயம் வாங்கிய பத்திரத்தையும் நான் வாங்கி பார்க்கவில்லை. சர்வே எண். 111 புலப்பட வரைபட நகலை நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ அல்லது வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்போ வாங்கி பார்க்கவில்லை.

13) நான் வழக்குரையுடன் புலப்படம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வரைபடத்தில் நான் தாவா சொத்தாக காண்பித்திருக்கும் சொத்து நான் சொன்னவாறு இந்த வரைபடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் தான் உள்ளது. எனது அப்பா கிரயம் வாங்கிய சொத்திற்கு கீழ்புறம் தான் 0.57 செண்ட் குறைகிறது என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் கீழ்புறம் உள்ள சொத்து 111/2A 1 என உட்பிரிவாகி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே நம்பரை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

14) வா.சா.ஆ.3 ஆக குறிப்பிடப்பட்டுள்ள வாய்தா ரசீதுகள் தாவா சொத்திற்கு உரியது அல்ல என்றாலும் அதற்கு மேற்புறம் உள்ள சொத்துக்களுக்குரியது என்று சொன்னால் சரியல்ல. தெற்குபுறம் உள்ள பாதையில் 111/M என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக வா.சா.ஆ.5-ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை பிரதிவாதிகளாக மாற்றி கொண்டார்கள். பாலமுருகன், மணிமுருகனையும் நான் எதற்காக பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் நான் பயிர் செய்து வரும் தெற்க பகுதியில் அவர்களுக்கு இடம் இருப்பதாக கூறி தகராறு செய்ததன் அடிப்படையில் நான் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன்.

15) நான் அனுபவம் செய்து வரும் நிலத்தில் 111/1M என்பது பாதை கிடையாது. 111/1M என்பது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எந்த வகைப்பாட்டில் இருந்தது என்பதை நான் தெரிந்துக் கொண்டேனா என்றால் இல்லை. சர்வே எண். 111/1M -ல் உள்ள சொத்தை 1 முதல் 3

Downloaded from

வரையான பிரதிவாதிகள் 18/02/2008 ஆம் தேதியும், 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் 15/04/2018 ஆம் தேதியும் கிரயம் பெற்ற விபரம் பெற்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

16) இந்திரா கிரயம் வாங்கிய சொத்திலும் என்னுடைய குறைகின்ற இடம் இருக்கிறது என்று சொல்கிறேன். ஆனால் இந்திரா இந்த வழக்கில் நான் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் அரசாங்கத்தையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா கிரயம் வாங்கிய இடத்தை விட அதிகமான இடம் தான் எங்கள் வசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்திரா மற்றும் பிரதிவாதிகள் வாங்கிய இடத்திற்கு தாவா சொத்தில் உள்ள பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரிதான்.

17) உட்பிரிவு செய்த விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றாலும், 25 வருடங்கள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்று சொன்னால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

*Sd/-*

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DM Kunnam